1988 ஜனவரி 28]

பிற்பகல் 3—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது. (கூச்சல்— குழப்பம்).....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எது வேண்டுமானாலும் செய்யலாம்.....(கூச்சல்— குழப்பம்).

(பல உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து பெரும் அமளி செய்தனர். அவர்கள் பேரவைத் தலைவரின் ஆசனத்தில் அமர முயற்சித்தனர். உறுப்பினர் திரு. சிவராமன் பேரவைத் தலைவரின் மடியில் வந்து அமர்ந்தார். பேரவைத் தலைவரின் மேசை கீழே தள்ளப்பட்டது. பேப்பர் வெயிட்டுகள் வீசப்பட்டன. மைக்குகள் உடைக்கப்பட்டு, நாற்காலிகள் தூக்கியடிக்கப்பட்டன. உறுப்பினர்களுக்குள் கைகலப்பு ஏற்பட்டு கலவர நிலை உருவாகியது. மாண்புமிகு பேரவைத் தலைவர் தம் அறைக்குச் சென்றார்.)

பின்னர் பேரவை பிற்பகல் 3-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலத்தோடு ஆராய்ந்து நடத்தல் நில்லாத இயல்புடைய செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

> ‘‘ அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
> ஊதியமும் சூழ்ந்து செயல். ’’

ஒரு செயலைத் தொடங்கும் முன் அதனால் அழிவதையும், அழிந்தபின் ஆவதையும் பின்பு உண்டாகும் ஊதியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

2. அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு மற்றும் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் பதவி இழத்தல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967ஆம் ஆண்டு தமிழகத்தின் விடிவெள்ளியாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கி வைத்த அரசை, 7 ஆண்டுக் காலம் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் காத்து வந்த அரசை, 10 ஆண்டுக் காலத்திற்கு மேல் தமிழகத்தின் நாயகன், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்டிக் காத்து வந்த அரசைத் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டும் என்கிற உணர்வோடு

அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு மற்றும் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் பதவி இழத்தல்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1988 ஜனவரி 28

பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் ஜானகி அம்மையாரை ஆதரிக்கிற இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் டிவிஷன் கோரினர் டிவிஷன் கோரப்பெற்றதால் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு மணி இரண்டு நிமிடம் அடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நுழைவாயில்களின் கதவுகளை மூடவேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

(நுழைவாயில்களின் கதவுகள் அனைத்தும் மூடப்பெற்றன.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் மீண்டும் வாக்கெடுப்புக்கு விடப் பெறுகிறது.

தீர்மானம் மீண்டும் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

டிவிஷன் கோரப் பெற்றதற்கு இணங்க எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப் பெற்றன :

பிளாக் 1 :

ஆதரித்தோர்

1. திரு. துரை கோவிந்தராசன்
2. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
3. திரு. தி. அன்பழகன்
4. திரு. கா. வே. கந்தசாமி
5. திரு. பி. முசிறிபுத்தன்

6. திரு. வே. இரா. ஜெயராமன்
7. திரு. இரா. அரிக்குமார்
8. திரு. பொ. அன்பழகன்
9. திரு. ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி
10. திரு. அ. க. ஆறுமுகம்
11. திரு. கோ. இரகுபதி
12. திரு. செ. இரத்தினவேலு
13. திரு. ஆர். இராசமாணிக்கம்
14. திரு. எல்ல. இராசமாணிக்கம்
15. திரு. எப். எம். இராசரத்தினம்
16. திரு. எம். இராசரத்தினம் என்கிற மணி
17. திரு. ப. ந. இராமச்சந்திரன்
18. டாக்டர் கா. ப. இராமலிங்கம்
19. திரு. கி. எத்திராசன்

எதிர்த்தோர்— இல்லை

நடுநிலை வகித்தோர்— இல்லை

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாக் எண் 1–ல் இருக்கை எண் 4–ல் உள்ள திரு. சேலம் மு. ஆறுமுகம், இருக்கை எண் 12–ல் உள்ள திரு. மு. ஆனந்தன், இருக்கை எண் 14–ல் உள்ள திரு. எம். வி. இரத்தினம் ஆகிய மூவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள், எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் நான் வழங்கிய 'விப்'–புக்கு எதிராகச் செயல்பட்டுள்ளனர். அதைத் தாங்களே நேரில் பார்க்கிறீர்கள். எனவே அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன்.

(கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரும் எல்லா மனுக்களையும் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அவர் அளித்தார்.)

அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு மற்றும்
கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ்
உறுப்பினர்கள் பதவி இழத்தல்.

[1988 ஜனவரி 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலேயே எல்லோருடைய முன்னிலையில் நீங்கள் தெரிவித்த உறுப்பினர்கள் உங்களுடைய கொறடாவை மீறி இருக்கின்றார்கள். இதற்கு வேறு சாட்சியே வேண்டாம். என் முன்னாலேயும் நடைபெற்றது. உங்களுடைய முன்னாலேயும் நடைபெற்றது. அவர்கள் 'விப்'–பை மீறிய காரணத்தினால் இதற்குச் சாட்சியமே இந்த இடத்தில் நாம் அனைவரும் இருக்கின்ற காரணத்தினால் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் அவர்கள் பதவி இழக்கின்றார்கள் ; 'டிஸ்குவாலிபை' ஆகின்றார்கள் என்ற உத்தரவை அவையிலேயே நான் தெரிவிக்கின்றேன். இந்த உத்தரவு உடனே அமலுக்கு வருகிறது.

பிளாக் 2 :

ஆதரித்தோர்

20. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்

21. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்

22. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்

23. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி

24. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்

25. மாண்புமிகு திரு. த. இராமசாமி

26. திரு. எஸ். என். இராசேந்திரன்

27. திரு. இரா. அருணாசலம்

28. திரு. தா. வீராசாமி

29. திரு. என். நல்லுசாமி

30. திரு. எம். ஆர். கோவேந்தன்

31. திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்

32. திரு. இரா. சண்முகம்

33. டாக்டர் கே. சமரசம்

34. திரு. க. இரா. சின்னராசு

35. திரு. இரா. தாமரைக்கனி

36. திரு. கே. ஆர். கணபதி

37. திரு. பெ. கந்தசாமி

38. திரு. சோ. கலிதீர்த்தான்

39. திரு. வி. இரா. கிருஷ்ணசாமி

40. திரு. ஜி. கிருஷ்ணராஜ்

41. திரு. கு. குப்புசாமி

42. திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன்

43. திரு. ச. சங்கரலிங்கம்

44. திரு. என். சண்முகம்

45. திரு. மு. சண்முகையாபாண்டியன்

46. திரு. மு. சந்திரசேகர்

47. திரு. தா. சாமிக்கண்ணு

48. திரு. ஆ. சிவக்குமார்

49. திரு. எம். சிவக்குமார்

50. திரு. சி. சிவப்பிரகாசம்

51. திரு. மு. சின்னக்குழந்தை

52. திரு. மா. சினனராசு

53. திரு. சி. சுப்புராயர்

54. திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன்

55. திரு. செ. செம்மலை

56. திரு. கே. பி. கே. சேகர் என்கிற கே. பி. குலசேகரன்.

57. திரு. க. சோலைராசு

58. திரு. சைதை சா. துரைசாமி

59. திரு. சா. ஞானசுந்தரம்

60. திரு. மு. தங்கமணி

எதிர்த்தோர்—இல்லை

நடுநிலை வகித்தோர்—இல்லை

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாக் எண் 2-ல் இருக்கை எண் 40-ல் திரு. கு. அ செங்கோட்டையன், இருக்கை எண் 41-ல் திரு. ப. தனபால், இருக்கை எண் 43-ல் திரு. துரை ராமசாமி, இருக்கை எண் 60-ல் திரு. வே. கு. சின்னசாமி, இருக்கை எண் 64-ல் திரு. வீ. சுப்பிரமணியன், இருக்கை எண் 71-ல் திரு. ஏ. தங்கராசு ஆகிய 6 பேர்கள், நான் அளித்த, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அதிகாரத்தின் கீழ் வழங்கிய 'விப்'-புக்கு எதிராகச் செயல்பட்டுள்ளனர். எனவே அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சித் தாவல் தடைச் சட்டம்—10th Schedule, Paragraph 2—Disqualification on the ground of defection 2 (b)—இந்தப் பிரிவின் கீழ் நீங்கள் அளித்த கொறடாவை அவர்கள் மீறியிருக்கின்றார்கள். இங்கே வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட பிறகும், ஆஜராகிற கட்சியிலே 'இருக்கிறோம்' என்று அவர்கள் எழுதிக் கொடுத்த பிறகும், உங்களுடைய கட்சித் தலைவரையே தலைவராக 'நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்' என்று சொன்ன பிறகும், இங்கே வராமல் அந்தத் தவறை—மன்னிக்க முடியாத தவறைச்—செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த அவையே சாட்சியாக—எப்படி நான் ஒன்றாவது பிளாக்கில் இருக்கக் கூடியவர்களை 'டிஸ்குவாலிபை' பண்ணினேனோ அதுபோலவே—அவர்களும் பதவி இழக்கிறார்கள். இது உடனே அமலுக்கு வருகிறது. நான் காவல் துறை அதிகாரிகளுக்கும், இங்கே காவலாளர்களுக்கும், இந்த வளாகத்திற்குள் அவர்கள் வருவதற்கு அனுமதிக்கக்கூடாது என்று உத்தரவிடுகிறேன்.

பிளாக் 3 :

ஆதரித்தோர்

61. மாண்புமிகு திரு. எ. அருணாசலம்.

62. திருமதி கோமதி சீனிவாசன்.

63. திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

64. திருமதி பா. வளர்மதி.

65. திரு. கே. உச்சி.

66. திரு. செ. பட்டாபிராமன்.

67. திரு. நிலக்கோட்டை அ. பாலுசாமி.

68. திரு. இரா. சா. முனிரத்தினம்.

69. திரு. மு. ஜான் வின்சென்ட்.

70. திரு. செ. தங்கராசு.

71. திரு. தமிழ்மணி

72. திரு. எஸ். பி. துரைராசு.

73. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்.

74. திரு. த. பழனி.

75. திரு. க. செ. பழனிச்சாமி.

76. திரு. மு. பாண்டுரங்கன்.

77. திரு. எஸ். பாலசுப்பிரமணியன்.

78. திரு. கா. பாலாஜி.

79. திரு. பரம்பை ஏ. பாலுச்சாமி.

80. திரு. எஸ். புருஷோத்தமன்.

81. திரு. கோ. பெருமாள் பிள்ளை.

82. டாக்டர் அ. பொன்னுசாமி.

83. திரு. தி. நா. கோ. அ. மனோகரன்.

84. திரு. யு. பி. மாதையன்.

எதிர்த்தோர்—இல்லை.

நடுநிலை வகித்தோர்—இல்லை

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி எண் 3-ல், இருக்கை எண் 83-ல் திருமதி இரா. சரோஜா, இருக்கை எண் 84-ல் திருமதி பி. லட்சுமி, இருக்கை எண் 87-ல் திரு. கே. பி. நாச்சிமுத்து, இருக்கை எண் 90-ல் திரு. இரா. முத்தையா, இருக்கை எண் 95-ல் திரு. துரை அன்பரசன், இருக்கை எண் 97-ல் திரு. க. நரசிம்மபல்லவன், இருக்கை எண் 98-ல் திரு. பூ. மு. நரசிம்மன், இருக்கை எண் 99-ல் டாக்டர் த. முகம்மது சலீம், இருக்கை எண் 100-ல் திரு. பு. கோ. நாராயணன், இருக்கை எண் 105-ல் திரு. பாப்பா சுப்பிரமணியன், இருக்கை எண் 106-ல் திரு. சு. பாலகிருஷ்ணன், இருக்கை எண் 107-ல் திரு. வி. பாலகிருஷ்ணன், இருக்கை எண் 108–ல் திரு. க. பாலசுப்பிரமணியன், இருக்கை எண் 112-ல் திரு. வி. எஸ். பஞ்சவர்ணம், இருக்கை எண் 113-ல் திரு. ஆ. பிரேம்குமார், இருக்கை எண் 115-ல் திரு. அ. பெரியசாமி, இருக்கை எண் 116-ல் திரு. த. பெருமாள் ஆகியோர், எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி நான் அவர்களுக்கு வழங்கிய 'விப்'–புக்கு எதிராகச் செயல்பட்டுள்ளனர். அதைத் தாங்களே நேரில் பார்க்கிற காரணத்தால் அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும்—கன்டோன் செய்யவில்லை என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சித் தாவல் தடைச் சட்டம் பத்தாவது ஷெட்யூல், பாரா 2–ன்படி Disqualification on the ground of defection 2 (b) நீங்கள் கொடுத்த கொறடாவை, உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் உங்களுடைய கட்சித் தலைமையை ஏற்றவர்கள், ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று எனக்குத் தெரிவித்தவர்கள், கடிதம் எழுதிக் கொடுத்தவர்கள், உங்களுடைய முதலமைச்சரை முதலமைச்சராக ஏற்றவர்கள்—இங்கே நீங்கள் கொடுத்த கொறடாவை—ஏற்காமல், இன்றைக்கு எடுக்கக் கூடிய நம்பிக்கை வோட்டுக்கு அவர்கள்

அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு மற்றும் கட்சித் தாவல் தடைச்சட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் பதவி இழத்தல்.

1988 ஜனவரி 28] [பேரவைத் தலைவர்]

வந்து வாக்களிக்காமல் இருந்ததை இந்த அவையே பார்த்திருக்கிறது. நானும் பார்த்து இருக்கிறேன். ஆகவே அவர்களை மன்னிக்காத காரணத்தால் அவர்கள் இந்த நிமிடமே பதவி இழக்கிறார்கள் என்று நான் இங்கே உத்தரவிடுகிறேன். இங்கே காவலாளர்கள் அவர்களை உள்ளே அனுமதிக்கக் கூடாது என்றும் வளாகத்திற்கும் வரக் கூடாது என்றும் உத்தரவிடுகிறேன்.

பிளாக் 4 :

ஆதரித்தோர்.

85. திரு. க. இராசாராம்.

86. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.

87. திரு. செ. மாதவன்.

88. டாக்டர் கா. காளிமுத்து.

89. திரு. கே. முத்துவேல்.

90. திரு. மு. மாரிமுத்து.

91. திரு. ம. நா. ராமஜெயம்.

92. திரு. கூடலூர் இ. வி. வேலு.

93. திரு. கு. வடிவேல்.

94. திரு. என். விஜயபாலன்.

95. திரு. வே. குப்புசாமி.

96. திரு. அ. வெங்கடாசலம்.

97. திரு. டி. எம். வெங்கடாசலம்.

98. திரு. சு. ஜெகதீசன்.

99. திரு. ஜி. கே. பிரான்சிஸ்.

அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு மற்றும் கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் பதவி இழத்தல்.

[பேரவைத் தலைவர்] [1988 ஜனவரி 28

எதிர்த்தோர்.

1. திரு. குமரகுருபர ராமநாதன்.

2. திரு. ஆ. நடராசன்.

3. திரு. மா. மணிமாறன்.

4. திரு. அ. மலர்மன்னன்.

5. திரு. பொன் முத்துராமலிங்கம்.

6. திரு. அ. ரகுமான்கான்.

நடுநிலை வகித்தோர்.

1. திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்.

2. திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி எண் 4-ல் இருக்கை எண் 133-ல் உள்ள திரு. த. மாரிமுத்து என்னும் உறுப்பினர், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர், எனக்கு அளிக்கப் பட்ட அதிகாரத்தின் கீழ் நான் வழங்கிய 'விப்'-புக்கு எதிராகச் செயல்பட்டுள்ளார். அதைத் தாங்களே அவையிலே நேரில் பார்க்கிறீர்கள். எனவே அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். அவர்கள் நடவடிக்கையைக் கன்டோன் செய்யவில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிளாக் எண் 1, 2, 3 ஆகிய மூன்று இடத்திலும் உங்களுடைய கொறடாவை மீறியவர் களுக்கு நான் அளித்த தீர்ப்பு இதற்கும் பொருந்தும்.

பிளாக் 5 :

ஆதரித்தோர்—இல்லை.

எதிர்த்தோர்.

(7) திரு. கி. மனோகரன்.

(8) திரு. சோ. மா. இராமச்சந்திரன்.

நடுநிலை வகித்தோர்.

(3) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்.

பிளாக் 6 :

ஆதரித்தோர்—இல்லை.

எதிர்த்தோர்—இல்லை.

நடுநிலை வகித்தோர்—இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

தீர்மானத்தை ஆதரித்தோர்	99
தீர்மானத்தை எதிர்த்தோர்	8
நடுநிலை வகித்தோர்	3

ஆகவே திருமதி ஜானகி எம்.ஜி. ஆர். அவர்களுடைய அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறுகிறது என்று நான் தீர்ப்பளிக்கிறேன். (கரவொலி).

(புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். வாழ்க என்று கூறி சில உறுப்பினர்கள் கரவொலி எழுப்பினர்.)

[பேரவைத் தலைவர்] [1988 ஜனவரி 28

தலைவரைப் பற்றிப் புகழுவது தவறல்ல. இங்கே என்னென் னவோ நடைபெற்றது. பரவாயில்லை. இந்தச் சத்தம் அங்கே யுள்ள தலைவருடைய காதில் கேட்க வேண்டும். இன்றைக்கு நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் குறித்து சட்டத்தின் மூலம் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

In Democracy, participation is an important variable. If the participation is more, the functioning will be more effective. Otherwise, the functioning will be otherwise. Participation means wilful participation. Wilful neglect of participation should also be taken into consideration .....Majority means it is participation— majority.

இங்கே 99 பேர்கள் ஆதரித்து வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றீர்கள். அப்பேர்ப்பட்ட நிலையில் இன்றைக்கு நிறைவேறியிருக்கிறது. (கூச்சல்—குழப்பம்-கதவைச் சாத்தலாம்) அரசியல் சட்டத்தின் பிரிவு 189, அதாவது, It refers to Members present and voting. There is no comma. It is a conjunctive word and it makes obvious that unless the Member present also votes one way or the other—his presence is immaterial— and it is equivalent to withdrawal from the House. And, therefore the majority will have to be formed with reference to the Members of the House present and voting, that is, who have exercised their vote here. ஆகவே இன்றைக்கு இந்த அளவிற்கு இந்தத் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

சில உறுப்பினர்கள் எந்த அளவிற்கு கண்ணீயக் குறைவாக இன்றைக்கு நடந்து இருக்கிறார்கள் என்பதை நாட்டிற்கு நாம் சொல்ல வேண்டும். எந்த அளவிற்கு வரலாறு காணாமல் —இந்தச் சட்டமன்றம் தோன்றியது முதல், அமைக்கப் பட்டது முதல் — இந்தச் சட்டமன்றத்தை பாழ்படுத்தக் கூடிய அளவிற்கு, இழுக்கு ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு, பாரம்பரியம் இல்லாதவர்கள், இங்கே எப்படி நடந்து கொண்டார்கள் என் பதைத் திராவிடப் பாரம்பரியத்தில் உள்ளவர்கள் இன்றைக்கு நாட்டிற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது தமிழ் நாட்டிற்குத் தெரிய வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே வந்து முதலமைச்சராக அமர்ந்தார் கள். தொடர்ந்து கலைஞர் அமர்ந்தார். பிறகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே அமர்ந்தார்கள். இன்றைக்கு திருமதி ஜானகி எம். ஜி. ஆர். அவர்கள் இங்கே அமர்ந்து இருக்கி றார்கள்—திருமதி ஜானகி எம். ஜி. ஆர். இவர்களையெல்லாம் தட்டி விட்டு, மக்களையே பார்க்க முடியாமல், பார்க்காமல், உங்களையும்

1988 ஜனவரி 28] [பேரவைத் தலைவர்]

எங்களையும் வைத்து இங்கே வந்துவிடலாம் என்று—இனிமேல் தமிழ்நாட்டில் தமிழ் உணர்வை நிலைநாட்டுவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை, அவர்கள் என்னுடைய கண்ணை குத்த வந்த காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். அமர்ந்து இருந்தேன். இந்தியாவிலேயே எந்த சபாநாயகருக்கும் - இப்படி ஒரு தேசியக் கட்சி என்று சொல்லிக் கொண்டு இருப்பவர்கள் ஒரு சாதாரண அடிப்படை, அரிச்சுவடி தெரியாமல்-இந்தப் பதவியைப் பிடிப்பதற்கு, இந்த இடத்தில் அமர்வதற்கு, மக்களிடம் பிடிப்பு இல்லாமல் இங்கே இருந்த எட்டப்பரைப் பிடித்து அமர்ந்து விடலாம் என்று போட்ட திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி). திராவிடர்கள் இன்றைக்கு இதைப் பாதுகாத்து இருக்கிறீர்கள். நான் இதை மனப்பூர்வமாகச் சொல்கிறேன். திராவிட இனத்தைச் சேர்ந்தவன் தான் இந்த இடத்தில் அமர முடியும். என்றைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி), இந்த இடம் தமிழனுடைய இடம். இந்த இடம் வேறு யாருக்கும் அல்ல. இந்த இடத்திலிருந்து என்னைத் தள்ளிவிட்டு அமரலாம் என்று இவ்வளவு ஆசை. நீங்கள் எல்லாம் வாக்களித்து, எல்லோரும் ஏக மனதாக என்னைத் தேர்ந்தெடுத்து இங்கே அமர்த்திய பிறகு, என்னைத் தள்ளிவிட்டு, கண்ணைக் குத்த வந்து, இங்கே இருக்கக் கூடிய நாற்காலியை எல்லாம் தள்ளிப் போட்டு விட்டு, அவையை அலங்கோலமாக்கி—இந்திய தேசிய காங்கிரஸ், இது நாட்டையே ஆளுகிறது. இதை ஐ. நா. சபையில் சொல்ல வேண்டும். இந்தச் சபையில் அல்ல ; ஐ. நா. சபையில் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நிலை. இன்றைக்குத் தமிழ்நாட்டுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் இனத்திற்குத் தலைகுனிவு. தமிழக அரசியல்வாதிகளுக்குத் தலைகுனிவு. தமிழகத் தலைவர்களுக்குத் தலைகுனிவு—எளிதாக இந்த இடத்தில் வந்து அமர்ந்து விட வேண்டும். இதுதான் திட்டம். கட்சியும் இல்லாமல், நம்முடைய இரட்டை இலைச் சின்னத்தில், இங்கே உதயசூரியன் சின்னத்தில் வென்றவர்கள், எட்டப்பன் அவன்தான். அங்கே உதயசூரியன் ஒரு காலம் ; இங்கே இரட்டை இலை ஒரு காலம். அந்த அளவிற்கு, இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் நாடு அப்படி போய்க் கொண்டிருக்கிறது, எப்படி. இங்கே எதிர்பாராமல் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை நானும் கண்டிக்கிறேன். இந்த அவையும் கண்டிக்கிறது. தமிழ் நாடே கண்டிக்க வேண்டும்.

சபாநாயகருடைய கண்ணைக் குத்த வந்தவர்களை— இந்த நாட்டில் — இந்த அவைக்குள் யாரும் அனுப்பக் கூடாது என்று தமிழ் நாட்டு மக்களுக்கு இந்த அவையின் சார்பில் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். சபாநாயகரைப் பழித்தவர்கள் அரசியலில் விலாசம் இல்லாமல் போய் விடுவார்கள். அவ்வளவுதான். நான் பேசமுடியாது என்று நினைத்து, வந்து, என்னென்ன

அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு மற்றும்
கட்சித் தாவல் தடைச்சட்டத்தின்கீழ்
உறுப்பினர்கள் பதவி இழத்தல்.

[பேரவைத் தலைவர்] [1988 ஜனவரி 28

வார்த்தைகள்—சொல்ல முடியாது—கேவலமான வார்த்தைகள்—கேவலமான பேச்சுக்கள்—எதற்கு? முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் பெற்ற மக்கள் சக்தியை எளிதாக எடுத்துவிட வேண்டும். அதை எளிதாக எடுத்து அமர்ந்து விட வேண்டும் என்ற ஒரு ஆசை. இந்த ஆசைக்கு நாம் அடி பணியவில்லை. எவ்வளவு ஆசை, எவ்வளவு வேகம்? அந்த வேகத்தில்தான் இத்தனை மைக்குகளும் உடைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே எல்லாம் உடைக்கப்பட்டிருக்கின்றன. எதற்கு? யாரையோ இந்த வாசல் வழியாக சும்மா உட்கார வைப்பதற்கு இந்த ஆசை. நாட்டு மக்கள் அல்லவா உள்ளே அனுப்ப வேண்டும்.

அதைச் செய்யாத காரணத்தினால்—அப்பேர்ப்பட்டவர்கள் இனிமேலாவது திருந்த வேண்டும். நான் எனக்கு இழைக்கப் பட்ட இந்தக் கொடுமையை இந்தியாவிலுள்ள அத்துணை சபா நாயகர்களுக்கும் கடிதம் எழுதப் போகிறேன். போட்டோ எடுக்கச் சொல்லியிருக்கிறேன். எல்லோருக்கும் எழுதி இதை நான் அடுத்த சபாநாயகர்கள் மாநாட்டில் பேச இருக்கிறேன். சபாநாயகருக்கு இப்படி ஒரு நிலை என்றால் எப்படி இதற்குத் தீர்வு காண்பது, என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைத் தீர் மானிக்கப் போகின்றோம் என்று சொல்லி, இங்கே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய அரசை, அவருடைய துணைவியார் திருமதி ஜானகி எம்.ஜி.ஆர். அவர்கள் இன்றைக்கு அரசை அமைத்து நம்பிக்கை கோரியிருக்கிறார்கள். இன்றைக்கு நீங்கள் நம்பிக்கை தெரிவித்-திருக்கிறீர்கள். நீங்கள் எல்லோரும் வந்திருக்கிறீர்கள். இரத்த பாசத்தை வெளிப்படுத்தியிருக்கிறீர்கள்.

நான் எவ்வளவோ நடவடிக்கை எடுத்தேன். நாஞ்சிலார் அவர்களே, என்னுடைய நண்பர் திரு. ரகுமான்கான் மீது எடுத்தேன். யாரும் என்னை கண்ணைக் குத்த வரவில்லை. நான் எவ்வளவு வேகமாக எடுத்தேன்! இதுதான் ரத்தம். நான் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. உட்கார்ந்திருந்தேன். வேகத்தைப் பாருங்கள்.

தமிழ் உணர்வை நீங்கள் காட்டினீர்கள். நீங்கள் காட்டிய தமிழ் உணர்வுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். நான் வேக மாக சட்டத்தைப் பின்பற்றி எடுக்கக் கூடிய சில சூழ்நிலைகளில் கூட எந்த நடவடிக்கையும் என்னுடைய நண்பர்கள் எனக்கு எதிராகக் காட்டவில்லை. ஆகவே இதை நான் மதிக்கிறேன். இப்பேர்ப்பட்ட இந்த நட்பை நான் வாழ்நாளில் மறக்க மாட் டேன். அந்த அளவுக்கு நீங்கள் எல்லோரும் இன்றைக்கு நம் முடைய புரட்சித் தலைவருடைய அரசைக் கவிழ விடாமல்,

அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு மற்றும்
கட்சித்தாவல் தடைச் சட்டத்தின்கீழ்
உறுப்பினர்கள் பதவி இழத்தல்.

1988 ஜனவரி 28] [பேரவைத் தலைவர்]

அவருடைய ஆட்சி நிலை பெறுவதற்கு எல்லோரும் ஒற்றுமையாக இங்கே வந்து, இந்த ஆட்சி மீது நம்பிக்கையைத் தெரிவித்திருக்கின்றீர்கள். தமிழ் மக்களுக்கு இது ஒரு பொன்னாள். இங்கேயிருந்து விலகிச் சென்றவர்கள் கூட எண்ணிப் பார்ப்பார்கள்—புரட்சித் தலைவருக்குத் துரோகம் செய்து விட்டோம் என்று எண்ணுவார்கள். அங்கேயிருந்து துரோகம் செய்துவிட்டு இங்கே வந்தவர்களும் எண்ணுவார்கள். அப்படியிருக்கக் கூடிய நிலையில் இன்றைக்கு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. அரசினர் தீர்மானம்.

விதி 25 (1)–ன் படி பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் சபையை ஒத்தி வைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" பேரவை விதி 25 (1)ன்படி பேரவை இன்று ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் பிப்ரவரி திங்கள் 1ஆம் தேதி காலை 9-00 மணிக்குக் கூடும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் 1988 பிப்ரவரி 1ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை கூடும.

பின்னர் பேரவை பிற்பகல் 3-48 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் :

(ஏதுமில்லை.)